# இலங்கையின் இனவாத அரசியலில் ஜே.வி.பி – ஒரு நோக்கு

**Srirangan Pirasath**
Vavuniya Regional Study Centre,
Open University of Sri Lanka
sripirasath_87@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்:**

தற்கால அரசுகளில், அரசியல் கட்சிகள் தவிர்க்க முடியாத அம்சமாக விளங்குகின்றன. மக்களாட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் வாக்குரிமை, பிரதிநிதித்துவ ஆட்சியியல் என்பன வளர்ச்சியடைய ஆரம்பித்தன. பாராளுமன்ற அரசாங்க முறையின் வளர்ச்சியோடு கட்சிகளின் பங்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. இலங்கையின் மூன்றாவது தேசியக் கட்சியாக மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) விளங்குகின்றது. 1965 ஆம் ஆண்டு மே 20ம் திகதி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வாலிய முன்னணியின் தலைவரான ரோகண விஜயவீர பின்னர் இக்கட்சியின் ஸ்தாபகர் ஆவார். இக்கட்சி ஆரம்பத்தில் இடதுசாரிக் கொள்கையினை தீவிரமாக முன்னெடுக்கும் அமைப்பாக விளங்கியது. 1971, 1989 ஆகிய ஆண்டுகளில் அரசுக்கெதிரான ஆயுத நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டமையினால் இக்கட்சியின் தலைவர் உட்பட இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு இக்கட்சி தடைசெய்யப்பட்டது. பின்னர் 1994 ஆம் ஆண்டு முதல் இக்கட்சி மீண்டும் செயற்பட அனுமதி வழங்கப்பட்டதோடு 2001, 2004ம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் போட்டியிட்டு 39 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டனர். அதன் பின்னர் கட்சியில் ஏற்பட்ட பிளவுகள் காரணமாக இக்கட்சி வீழ்ச்சியினை அடையத் தொடங்கியிருந்த போதும் இக்கட்சியின் அரசியல் கலாசார முறை இலங்கை அரசியலினைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவதனை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் முறை, கொள்கை, கட்சியின் வளர்ச்சி, பிளவு, இனவாதம் என்பன குறித்து விமர்சன முறையில் நோக்குவதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது. இவ் ஆய்வுக் கட்டுரையானது விபரண முறையியல், பகுப்பாய்வு முறையியல், விமர்சன முறையியல் என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இவ் ஆய்வுக்கான தரவுகள் இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

***பிரதான சொற்பதங்கள்**: கட்சி, இலங்கைய அரசியல், மக்கள் விடுதலை முன்னணி, இனவாதம், இடதுசாரிக் கொள்கை*

## ஆய்வின் அறிமுகம்

தற்கால அரசுகளில் அரசியல் கட்சிகள் தவிர்க்க முடியாத அம்சமாக விளங்குகின்றன. டொனமூர் சீர்திருத்தத்தின் சர்வஜன வாக்குரிமையின் விளைவு காரணமாக அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன. இலங்கையில் அனைவரையும் இணைக்கக்கூடிய கட்சிகள் இல்லாத நிலையே தற்போது உள்ளது. அத்தோடு நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினை காரணமாக பல்வேறு இன மக்களும் தத்தமது இனரீதியான கட்சிகளுக்கு பின்னாலேயே அணிதிரளும் போக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக பலகட்சி முறையிலமைந்த இரு கூட்டுக்கட்சி முறை உருவாகியது. அதாவது பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றுக்குப் பின்னால் ஏனைய இன, மத, பிரதேச ரீதியான கட்சிகளின் ஆதரவின் அடிப்படையில் ஆட்சி அமைக்கின்ற போக்கு காணப்பட்டது. ஆனால் இலங்கையின் மூன்றாவது சக்தியாக மக்கள் விடுதலை முன்னணி உருப்பெற்றுள்ளதோடு அவர்களின் கொள்கைகளும், செயற்பாடுகளும் இனவாத அரசியலுக்கு தூபமிட்டது.

## இலக்கிய மீளாய்வு

சி.அ.யோதிலிங்கம் 'இலங்கையின் அரசியல் கட்சிமுறைமை' (2008) என்ற நூலில் இலங்கையில் அரசியல் கட்சிகளின் தோற்றம், அதன் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான விடயப்பரப்புக்களை தெளிவுபடுத்தியுள்ளார்.

வே.குணரத்தினம் 'அரசியல் கட்சிகள் அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம்' (2009) என்ற நூலில் அரசியல் கட்சிகளின் தோற்றம், அதன் வகைப்பாடு, பணிகள் என்பவற்றினை கோட்பாட்டுத் தளத்தில் நின்று ஆராய்வதாக அமைகின்றது.

தொழிலாளர் பாதை வெளியீட்டினால் வெளியிடப்பட்ட 'இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சியின் வரலாற்று சர்வதேசிய அடித்தளங்கள்' என்ற நூலில் இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளின் வளர்ச்சியையும், இடதுசாரிக் கட்சிகளின் பார்வையில் வலதுசாரிக் கட்சிகளின் கொள்கைகளையும், செயற்பாடுகளையும் நோக்குவதாக அமைகின்றது.

வ.திருநாவுக்கரசு 'தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வின்றி இலங்கைக்கு விடிவில்லை' (2014) என்ற நூலில் இலங்கை இனப்பிரச்சினையில் தேசிய வாதம், இனவாதப் போக்குகளின் நிலை, கட்சிகளின் செயற்பாடுகள் என்பன தொடர்பாக குறிப்பிட்டுள்ளார்.

அர்ஜீனா குணரத்ன 'வரலாற்று பிரக்ஞையின் உருவாக்கம்: மகாவம்சத்திலிருந்து சிங்கள் தேசியவாதத்தை நோக்கி' (2010) என்ற கட்டுரையில் இலங்கையில் எவ்வாறு சிங்கள தேசிய பௌத்தவாதம் தோற்றம் பெறுகின்றது என்பதனை விமர்சனப் பார்வையில் நோக்கியுள்ளார்.

மேற்குறித்த ஆய்வுகள் இவ் ஆய்வுக்கு சிறந்த அடித்தளத்தினை வழங்குவதாகவும், இவ் ஆய்வுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாகவும் அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

இன்றைய ஜனநாயக அரசாங்க முறையில் அரசியல் கட்சிகளின் பங்கு இன்றியமையாதது. இதன் காரணமாகவே இன்றைய அரசாங்கம் கட்சி அரசாங்கம் என்று அழைக்கப்படுகின்றது. இலங்கையின் மூன்றாவது அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ள மக்கள் விடுதலை முன்னணி சோசலிச சிந்தனையில் இருந்து விடுபட்டு இன்று இனவாதத்தினூடாக ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்ற எத்தணிக்கின்றது.

**கருதுகோள்**

ஜே.வி.பியின் கொள்கைகளும், செயற்பாடுகளும் சோசலிச சிந்தனையில் இருந்து விடுபட்டு இனவாதப் போக்கினை விதைப்பதாக அமைகின்றன.

**ஆய்வின் நோக்கம்**

ஜே.வி.பியின் இனவாத அரசியல் செயற்பாடுகளையும் அதன் விளைவுகளினையும் விமர்சன கண்ணோட்டத்தோடு மதிப்பீடு செய்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

**பகுப்பாய்வு**

அரசியற் கட்சிகள் என்பன ஜனநாயக முறைமையில் இன்றியமையாதவையாகும். ஜனநாயகம் பற்றிய சரியான விளக்கத்தினையும் செயற்பாட்டினையும் உறுதிப்படுத்துவனவாக அரசியல் கட்சிகள் அமைகின்றன. ஜனநாயகம் பற்றிய சரியான விளக்கமானது அதன் பன்மைத்துவத்தைப் புரிந்து கொள்வதிலேயே தங்கியிருக்கின்றது. ஒன்றுக் மேற்பட்ட இன, மத,மொழி, கலாசார, பிரதேச

வேறுபாடுகளைக் கொண்டிருக்கும் நாடுகள் மட்டுமன்றி இவற்றில் ஒருமித்த தன்மையைக் கொண்டிருக்கும் நாடுகளுக்கும் பன்மைத்துவத் தன்மை என்பது கருத்தியல் ரீதியாக இருக்கும். இவற்றுக்கிடையே அரசாங்க நிர்வாகத்தை ஒழுங்குபடுத்து வதற்காகத்தான் ஜனநாயக முறைமை கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆக, ஜனநாயகம் என்பத தன்னளவிலேயே பன்முகத் தன்மையினை வெளிப்படுத்துகின்றது அல்லது பன்முகத் தன்மைக்கு அங்கீகாரம் கொடுக்கின்றது எனலாம். இந்த வகையில் அரசியல் கட்சிகளும் மேற்குறித்த பன்முகத் தன்மையின் பிரதிபலிப்புக்களாகவே அமைகின்றன.

இலங்கையின் அரசியற் கட்சிகளுள் மக்கள் விடுதலை முன்னணியும் ஒன்றாகும். இது சுருக்கமாக ஜே.வி.பி (J.V.P) என்று அழைக்கப்படுகின்றது. இடதுசாரிக் கொள்கை மற்றும் தேசியவாதம் சார்ந்த கொள்கைகளைப் பின்பற்றி வருவதோடு இலங்கை அரசியலில் மூன்றாவது சக்தியாக கருதப்படுகின்றது. 1965ம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (பீஜிங் சார்பு) எனும் கட்சியில் வாலிப முன்னணித் தலைவராக விளங்கிய ரோகண விஜயவீர இக்கட்சியின் ஸ்தாபகர் ஆவார். ஆரம்ப காலத்தில் இடதுசாரிக் கொள்கைகளை ஒரு தீவிரப் போக்குடன் முன்னெடுக்கும் அமைப்பாக விளங்கியது. இடதுசாரி சிந்தனையினால் கவரப்பட்ட படித்த வேலையற்ற கிராமப்புற இளைஞர்கள், மாணவர்கள், தாழ்ந்த சாதியினர் பெருமளவாக ஜே.வி.பியில் இணைந்து கொண்டனர். அத்தோடு இரகசியமான முறையில் ஆயுதப் புரட்சிக்கு வேண்டிய ஆயுதங்களையும் செய்து வந்தனர். 1971 மார்ச்சில் ஜே.வி.பி.யின் இரகசிய ஆயுதக்கிடங்கு பற்றி ஆளும் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசிற்குத் தெரியவந்தது. இதனை அடுத்து ஜே.வி.பி.யின் தலைவர் ரோகண வீஜயவீர உடனடியாகக் கைது செய்யப்பட்டார். பின்னர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். தலைவர் சிறைக்குள் இருக்கும்பொழுதே 1971 ஏப்ரல் 5ம் திகதி இலங்கை அரசிற்கு எதிராக ஜேவிபியினர் நாட்டின் பல பாகங்களில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். பல பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. தெற்கின் பல பாகங்கள் ஜேவிபியின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. கிளர்ச்சியினை முறியடிக்க இலங்கை அரசாங்கம் சர்வதேச உதவியினைக் கோரியது. உதவிக்கு விரைந்த இந்தியா, சீனா நாடுகளின் உதவியுடன் ஆயுதக்கிளர்ச்சி இரண்டு வார காலத்தினுள் அடக்கப்பட்டது. ஜேவிபி உறுப்பினர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். முடிவில் ஜேவிபியினை இலங்கை அரசு தடை செய்தது.

1977 ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வென்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐதேக அரசு ரோகண வீஜயவீரவை விடுதலை செய்ததுடன் ஜே.வி.பி மீதான தடையினையும் நீக்கியது. ஜே.வி.பி. நாடாளுமன்ற ஜனநாயக முறைக்குத் திரும்புவதாக அறிவித்ததுடன், தேர்தல்களிலும் பங்குபற்றினர். 1982 ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பியின் வேட்பாளராக ரோகண வீஜயவீர போட்டியிட்டு 275,000 வாக்குகளைப் பெற்றார்.
ஜே.வி.பி பலமான மூன்றாம் கட்சியாக எழுச்சி பெற்றதற்குரிய காரணிகளாக நாம் பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்.

1. சிங்கள மொழியில் பல்கலைக்கழக கல்வி கற்ற கிராமப்புற இளைஞர்களிடையே ஏற்பட்ட வேலையில்லாப் பிரச்சினை மற்றும் ஏனைய பொது வசதிகளை நியாயமான முறையில் பங்கிடுவதில் அரசாங்கம் காட்டிய அசமந்தமான போக்கு இக்கட்சியின் வளர்ச்சிக்கு ஒரு படியாக அமைந்தமை.

2. சிங்கள மொழியினை ஆயுதமாகக் கொண்டு பௌத்த சிங்கள தென்னிலங்கை இளம் சமூகமும் தேசிய மொழியினைக் கற்ற பெரும்பாண்மை ஒன்றின் மீது தாக்கம் செலுத்தி சிங்கள மொழியே பௌத்த மதத்தினைக் காக்கும் காவல் அரணாகவும், சிங்கள மொழியினைப் பாதுகாக்கும் ஒரு அணியாக தன்னை அடையாளப்படுத்தியமை.

3. இத்தகைய நிலைப்பாடுகளால் மனம் கசப்புக்கு ஆளாகியருந்த இளைய சமுதாயம், ஊழல், பலவந்தமாக அணிதிரட்டும் போக்கு, அரசியல் அடாவடி போன்ற பண்புகளற்ற ஜே.வி.பியினால் கவரப்பட்டமை.

4. 1971ம் ஆண்டு புரட்சியின் போது ஆயுதங்களை மறைத்து வைக்கும் இடங்களான இளம் பிக்குகளின் பௌத்த மடங்களுக்கு ஜே.வி.பி ஆதரவு வழங்கியிருந்ததோடு, பௌத்த தேசியவாதத்தினை வளத்தெடுப்பதன் மூலம் பௌத்த பீடங்களின் ஆதரவினையும் பெறமுடிந்தமை.

5. ஜே.வி.பியினர் நாட்டுப்பற்று தொடர்பாக அறைகூவல் விடுத்து இராணுவத்தைப் புகழ்வதுடன், இராணுவத்தில் அதிகம் சேரும் சமூகப் பிரிவுகளுடன் உறவினைப் பலப்படுத்தியது.

6. இலங்கையின் அரசியலில் தடுக்க முடியாத ஒரு விடயமாக சாதிக் கட்டமைப்பு அரசியலில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இதனை உடைத்த ஜே.வி.பி சாதிக் கட்டமைப்பினை நீக்கி தாழ்ந்த சாதிக்காரர்களையும் இணைத்து தனது அரசியல் பயணத்தினை ஆரம்பித்தது.

7. சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக இனவாத அரசியலை வளர்த்ததன் மூலம் சிங்கள இனவாத பௌத்த துறவிகளினது ஆதரவினையும் பெற முடிந்தமை.

8. சர்வதேச நிதி நிறுவனங்களையும், நோர்வேயின் மத்தியஸ்த பாங்கினையும் கடுமையாக விமர்சித்ததோடு சமாதானக் கொள்கைக்கு எதிராக யுத்த நாட்டத்திற்கு முழுமையான ஆதரவினை வழங்கியமை

9. 2004 சுனாமியினால் ஏற்பட்ட தாக்கத்தினை வைத்தது அரசியல் இலாபங்களைப் பெறமுனைந்தது. குறிப்பாக பத்தாயிரத்துக்கும் அதிகாமான தொண்டர்களை இணைத்து “சஹண சோவா பலகாய” (நிவாரண சேவைப்படை) மூலம் நிவாரணப் பணிகளை முன்னெடுத்து வந்தமையானது மக்கள் அரசின் மீது பெரும் அதிருப்தியும் கசப்பும் அடைந்திருந்த நிலையில் மக்களது ஆதரவினை இப்படையின் மூலம் திசைதிருப்பியமை

கொழும்பில் 1983 ஜுலையில் இடம்பெற்ற இனக்கலவரத்தினை அடுத்து அக் கலவரத்திற்கு ஜே.வி.பியினரே காரணமெனக் கூறி இலங்கை அரசால் மீண்டும் இவ்வமைப்பு தடை செய்யப்பட்டது. இதன் பின்னர் ஜே.வி.பினர் தலைமறைவாக இயங்கத்தொடங்கினர்.

மறுபக்கத்தில் 1989ஆம் ஆண்டு அழித்தொழிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி 1994 ஆம் ஆண்டு மீண்டும் செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர்களுள் உயிருடன் தப்பியிருந்த சோமவன்ச என்பவரே அதனைப் புணர் நிர்மாணம் செய்யும் பணிகளில் ஈடுபட்டார். 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியினர் ஸ்ரீ லங்கா முற்போக்கு முன்னணி (S.L.P.F) எனும் கட்சின் சார்பில் போட்டியிட்டனர். அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து நிகால் கலப்பதி என்பவர் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் 1999இல் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலிலும் மக்கள் விடுதலை முன்னணி சார்பிலேயே இவர்கள் போட்டியிட்டனர். இரண்டிலும் கணிசமான ஆசனங்களையும் இவர்கள் பெற்றுள்ளனர். அதுவும் மாகாணசபைத் தேர்தலின் பின்னர் மேல்மாகாணசபை, தென்மாகாணசபை என்பன இவர்களின் தயவிலேயே மாகாணசபை அரசாங்கத்தை நடாத்த வேண்டிய நிலையில் இருந்தன. இந்த வகையில் இலங்கை அரசியலில் தற்போது ஒரு மூன்றாவது சக்தியாக எழுச்சியடைந்து வருகின்றனர். நடைமுறையில் இருக்கும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல்முறை இவர்கள் நன்கு வலிமை

பெறுவதற்கு உதவியுள்ளது. 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இக்கட்சி 10 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. 2001 ஆம் ஆண்டு தேர்தலில் 16 ஆசனங்களைப் பெற்றது. சிறிது காலம் நான்கு அமைச்சர் பதவிகளையும் பொறுப்பேற்றிருந்தனர். 2002 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 219 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டனர். 2004 ஆம் ஆண்டு ஜனவரியில் பொதுஜன முன்னணியுடன் இணைந்து மக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பினை (UPLF) உருவாக்கினர். 2004 ஏப்ரல் பொதுத்தேர்தலில் இதன் சார்பில் போட்டியிட்டு 39 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டனர்.

2006ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவினை வெற்றிபெறச் செய்வதற்காக பிரசாரத்தில் ஈடுபட்டனர். 2008ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி பிளவுபட்டது. அதிலிருந்து கட்சியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினர் வெளியேறி தேசிய சுதந்திர முன்னணி என்ற அமைப்பினை உருவாக்கினர். இதே ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் கட்சி பெரியளவிற்கு சோபிக்கவில்லை. கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஒரு ஆசனத்தைப் பெற்றது. பின்னர் நடைபெற்ற வடமத்திய சப்பிரகமுவ மாகாணசபைத் தேர்தல்களில் பொலன்னறுவை மாவட்டம் தவிர்ந்து ஏனைய மூன்று மாவட்டங்களிலும் தலா ஒவ்வொரு ஆசனத்தை மட்டும் பெற்றுக்கொண்டது. பொலன்னறுவை மாவட்டத்தில் எந்தவொரு ஆசனமும் கிடைக்கவில்லை. வாக்குவீதம் என்ற வகையில் சராசரியாக 3.29 வீத வாக்குகளைப் பெற்றிருந்தது. சிங்கள மக்களில் அடித்தள மக்கள், மக்கள் விடுதலை முன்னணியை நோக்கி அணிதிரளும் போக்கு பரவலாக காணப்படுகின்றது. ஆனால் சிறுபான்மை இனங்களுடைய ஆதரவு இவர்களுக்கு பெரிதளவிற்கு கிடைக்கவில்லை.

1999 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பல சிறிய கட்சிகளை இணைத்து மூன்றாவது சக்தி ஒன்றை உருவாக்கும் பணியிலும் மக்கள் விடுதலை முன்னணி ஈடுபட்டது. இத்தேர்தலின் போது நவசமசமாஜக் கட்சியும், முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளருக்காக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தன. எனினும் மக்கள் விடுதலை முன்னணியின் இனவாத நிலைப்பாடு காரணமாக பின்னர் அவை தமது உறவுகளைத் துண்டித்தன. மக்கள் விடுதலை முன்னணியினுடைய அரசியற் கொள்கை ஏனைய இடதுசாரிக் கட்சிகளின் அரசியற் கொள்கைகளோடு பொதுவாக ஒத்திருந்த போதும் இனப்பிரச்சினை தொடர்பான கொள்கையில் மாத்திரம் வேறுபாடு காணப்பட்டது. அவர்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஏனைய இடதுசாரிக் கட்சிகள் முன்வைத்த சமஷ்டிக் கொள்கையினை ஏற்றுக் கொள்ளவில்லை. சமஷ்டிக் கொள்கை நாட்டின் பிரிவினைக்கே வழிவகுக்கும் என இவர்கள் குறிப்பிட்டனர். மாறாக தமது கொள்கையான சோசலிச அரசு என்பது நடைமுறைக்கு வரும் போது எல்லா இன மக்களும் சமத்துவமாக மதிக்கப்படுவதால் இனப்பிரச்சினை என்பதே இல்லாமல் போய்விடும் என இவர்கள் குறிப்பிட்டனர். இதன் அடிப்படையிலேயே பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகளையும் அவர்கள் எதிர்த்து வந்தனர்.

இலங்கையில் மிக நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்குள்ளான தீர்வைக்கூட ஏற்க மாட்டோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கூறியிருக்கிறார். தமிழ் மக்கள் ஒற்றையாட்சிக்குள் தீர்வை எதிர்பார்க்கவில்லை. குறைந்த பட்சம் சமஷ்டித் தீர்வையாவது முன்வைக்க வேண்டும் என்பதுதான் கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கிய ஆணை.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைப் பிரச்சினையை தன்னுடைய இனவாத ஆதிக்க சிந்தனையின் அடிப்படையில்தான் எல்லாக் கட்சிகளைப் போலவும் ஜே.வி.பி நோக்குகிறது என்பதையும் இன்னும் அந்த

நிலைப்பாட்டில்தான் அக்கட்சி இன்னமும் இருக்கிறது என்பதையும் இந்தக் கருத்து தெளிவுபடுத்துகிறது. தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரசைகளாக நடாத்தி அவர்களுக்கான சம உரிமையை மறுக்கும் இலங்கை ஆட்சி முறையை பாதுகாக்கும் அக் கட்சி, தமிழ் மக்களின் தீர்வு தொடர்பான சிறு முயற்சிகளையையே ஏதாவது காரணம் சொல்லி நிராகரிக்க முயல்வது புதிய விடயமல்ல.

அண்மைய காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி தமிழ் மக்களின் பிரச்சினை, தீர்வு உள்ளிட்ட விடயங்களில் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து வருவது அக்கட்சி தமது அரசியல் நோக்கங்களுக்காக மாத்திரமே தமிழ் மக்களின் பிரச்சினையை அணுகுகிறது என்பதையும் தொடர்ந்தும் அக் கட்சி இனவாத அடிப்படையில் செயற்படுகிறது என்பதையும் புலப்படுத்துகிறது. “தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காவிட்டால் மீண்டும் ஆயுதப் போராட்டம் உருவெடுக்கலாம். ஆனால் புலிகள் அழிக்கப்பட்ட விதத்தின் படி மீண்டும் ஆயுத போராட்டம் ஏற்படாது. நாம் பிரச்சினை ஏற்படுத்தாவிடின் மீண்டும் அத்தகைய நிலை உருவாகாது.“ (அக்டோபர் 24,2015 நாடாளுமன்றில் ஜெனீவா பிரேணை விவாத்தில்) இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஒருமுறை கூறினார்.

“13ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு இந்தியா கோரி வருவது தமிழ் மக்களின் நலனை கருத்திற்கொண்டல்ல. இந்தியாவின் பொருளாதார நலன்களை உறுதி செய்து கொள்ளும் நோக்கிலாகும். இந்தியா இன்று அதிகாரப் பகிர்வின் மூலம் நாட்டின் அரசியலில் தலையீடு செய்ய முயற்சிக்கின்றது. அதிகாரப் பகிர்வின் மூலம் சாதாரண பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டாது. தமிழ் இனவாத அரசியல்வாதிகள் தங்களது பதவியை தக்க வைத்துக்கொள்ள அதிகாரப் பகிர்வு குறித்து கோரி வருகின்றனர் என்ற நிலைப்பாட்டினையே மக்கள் விடுதலை முன்னணி கொண்டிருந்தது.

13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்க்கும் மக்கள் விடுதலை முன்னணி 2006ஆம் ஆண்டில் அந்த சட்டத்தையும் அதன்பால் இணைக்கப்பட்ட வடகிழக்கையும் பிரித்தவர்கள் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவது எதற்காக? இனப்பிரச்சினை சார்ந்த முயற்சிகளை முறியடிப்பதன் ஊடாக இந்த நாட்டில் இனப்பிரச்சினை ஒன்று இல்லை எனக் காட்ட ஜே.வி.பி முனைகிறது. தமிழ் மக்களின் தீர்வு தொடர்பான சிறு முயற்சிகளையும் எதிர்ப்பது தமிழ் மக்களுக்கு எந்தவொரு தீர்வையும் வழங்கிவிடக்கூடாது என்பதனாலா?
புதிய அரசியல் யாப்பு முயற்சிகளை குழப்ப மாட்டோம் என்றார் விஜித ஹேரத். ஆனால் எதனையும் மக்கள் விடுதலை முன்னணி குழப்பவே முனைகிறது. “புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கி விடுவதன் மூலம் வடக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்து விடும் என்று எவரும் நினைக்க முடியாது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குத் தமிழ் மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துப் கொண்டிருக்கின்றனர். அங்கு அவர்கள் நில உரிமை கோரவில்லை. மாறாக தமக்கு நிலமே கோருகின்றனர்.” என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடு.

ஆனால் புதிய அரசியல் அமைப்பு அவசியம் என்று கூறும் ஜே.வி.பி அதில் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வை கொடுக்கலாம் என்று குறிப்பிடலாம். இவ்வாறு தமிழ் மக்களுக்கான தீர்வு என்றதும் கண்ணை மூடிக் கொண்டு எதிர்ப்பது இனவாத, கடும்போக்கன்றி வேறு எவ்வாறு அழைப்பது? தமிழர் நில உரிமையை தமிழ் தலைவர்களிடம் கையளிக்காதே என்பதன் ஊடாக அதை சிங்கள தலைவர்களின் கையில் வைத்திரு என்று கூறுகிறாரா? என்பது போன்ற வினாக்கள் மேலெழுகின்றன. தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினை உள்ளது. அவர்களுக்கு தீர்வை கொடுக்காவிட்டால் மீண்டும் அவர்கள் ஆயுதம் ஏந்துவார்கள் எனத் தெரிவித்தார்.

பின்னர் 13ஆவது திருத்தம் தீர்வல்ல என்றார். பின்னர் புதிய அரசியல் அமைப்பிலும் தீர்வு தேவையில்லை என்கிறார். மகிந்த ராஜபக்ச போன்ற பேரினவாதிகளைப் போலவே தமிழ் மக்கள் விடயத்தில் ஜே.வி.பியும் தமது அரசியலுக்கும் அரசியல் சூழலுக்கும் ஏற்ப பேசுகின்றனர்.

சமஷ்டி முறை இனப்பிரச்சினைக்கு தீர்வாகாது. ஒன்றுபட்ட இலங்கைக்குள்தான் தீர்வு சாத்தியமானது என்று கூறிய மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரிவின் சில்வா "இன்றைக்கு சமஷ்டி ஆட்சிக்கு இடமில்லை என்று அரசாங்கம் கூறிக்கொண்டு ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரத்தை பகிர முனைகின்றது. ஒற்றையாட்சிக்குள் அதிகாரத்தை பகிர்ந்தாலும் எதிர்ப்போம். எப்படியான அதிகாரப் பகிர்வையும் எமது கட்சி எதிர்க்கும் அதிகாரப் பகிர்வால் வடக்கு மக்களுக்கு தீர்வு கிடைக்கும் என்பது வேடிக்கை" என்று தெரிவித்திருக்கிறார்.
ஆனால் ரில்வின் சில்வாவின் இந்தக் கருத்து தமிழ் மக்களுக்கு எந்தவொரு தீர்வையும் வழங்க மாட்டோம் என்பதன் வெளிப்பாடே. மகிந்த ராஜபக்ச, விமல் வீரவன்ச போன்ற கடும்போக்காளர்களுக்கும் ரிவின் சில்வா போன்ற ஜே.வி.பியினருக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்பதை இக் கருத்துக்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

வடக்கு மாகாண சபை பலவீனமாக உள்ளது என்றும் வடக்கிற்கு அதிகாரம் தேவையில்லை என்றும் அனுர கூறுகிறார். இலங்கை அரசு மீதான விமர்சனங்களுக்காக இலங்கை அரசே தேவையில்லை என்ற நிலைக்கு அனுர வருவாரா? ஆக தமிழ் மக்கள் சுயமான ஆட்சி ஒன்றில் ஈடுபடக்கூடாது என்ற காலம் காலமாக வளர்த்தெடுக்கப்பட்ட பேரினவாதச் சிந்தனை ஜே.வி.பியிடம் இன்னமும் அப்படியே இருக்கிறது என்பதுதான் இங்கு புலப்படுகிறது.
கடந்த காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் கால இன அழிப்பு யுத்தம் மற்றும் அதற்கு முந்தைய கால யுத்த நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவைக் கொடுத்திருந்தனர். அத்துடன் சமாதான ஒப்பந்தத்தை கிழித்தெறிந்து போரை தொடங்கிய புலிகளை அழியுங்கள் என்றும் அவர்கள் அப்போதைய அரசுகளை வலியுறுத்தினார்கள். அத்துடன் வடகிழக்கு மாகாணங்களை பிரிக்கும் வழக்கையும் தொடுத்தனர்.

இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக ஜே.வி.பி ஒரு பேரினவாதக் கட்சி என்ற பார்வையே அக் கட்சி மீது தமிழ் மக்களுக்கு உண்டு. போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் ஜே.வி.பி வடகிழக்கில் அரசியல் செய்ய வந்துள்ளது. காணாமல் போனவர்களுக்காகவும் போரில் உருவான விதவைகளுக்காகவும் மீள்குடியேற்றத்திற்காகவும் அவர்கள் இப்போது பேசுகின்றனர்.

ஆனால் தாமும் ஆதரித்த யுத்தம் ஒன்றினால்தான் இவைகள் நிகழ்ந்தன என்பதையோ, யுத்தம் ஒன்று போராட்டத்தை தமிழ் மக்களுக்கு எதிரானது என்பதையோ, இனப்பிரச்சினை காரணமாகவே யுத்தம் தோன்றியது என்பதையோ, தமிழ் மக்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது என்பதையோ, தமிழ் மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதையோ ஏற்றுக்கொள்ளாமல் அரசியல் செய்ய முனைகின்றனர்.

வடகிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஜே.வி.பி குரல் கொடுக்கிறது. ஆனால் அந்த பாதிப்பை ஏற்படுத்திய யுத்தத்தை அவர்கள் ஆதரித்தவர்கள் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் இன ஒடுக்குமுறைக்கு எதிராக போராடினார்கள் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளாத வரையில் தமிழ் மக்கள் இந்த நாட்டில் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதையும் அவர்களுக்கு உரிய தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்வது கடினமே.
தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சமஷ்டி தீர்வில்லை ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்று கூறிய ரில்வின் சில்வா இப்போது அதனையும் எதிர்ப்போம் என்று

சொல்கிறார். கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைதான் இது. சிங்களத் தலைவர்கள் இவ்வாறு எல்லாத் தீர்வுகளையும் எதிர்க்கும் அனுபவங்களில் ஜே.வி.பியும் விதிவிலக்கல்ல.

**முடிவுரை**

அரசியற் கட்சிகள் பன்மைத்துவத் தன்மையின் பிரதிபலிப்புக்களாக அமைகின்றன. இவை கருத்தியல் வேறுபாடுகளைப் பிரதிபலிக்கின்ற கட்சிகளாக உருவாகின்றன. அங்குதான் வேற்றுமையில் ஒற்றுமை காணும் கடினமான புரிந்துணர்வும் சகிப்புத் தன்மையும் அவசியமாகின்றன. இவற்றை அக்கட்சிகளே கட்டிவளர்க்க வேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது. சமூகத்தின் பன்மைத்துவத் தன்மையினை அங்கீகரிப்பதே அச்சமூகத்தின் ஸ்திரப்பாட்டுக்கு அத்திவாரமாக அமைதல் வேண்டும். இந்த அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே ஜனநாயகத்தில் கட்சி அரசியலின் தேவையும் நியாயப்படுத்தப்படுகின்றது. மாறாக இலங்கை பல் இன கலாசார பாரம்பரியத்தை கொண்ட நாடாக விளங்குகின்றது. JVP ஆரம்பத்தில் சோசலிச சிந்தனையினைக் கொண்டிருந்த போதிலும் பிற்பட்ட காலத்தில் குறிப்பாக 1999 இற்குப் பின்னர் இனவாத அரசியல் செயற்பாடுகளில் கால்பதித்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. ஜே.வி.பியினுடைய இனவாதப் போக்குகளாக பின்வருவனவற்றை இனங்காணலாம்.

- ஜே.வி.பி ஜனநாயக மற்றும் தேசியவாத அமைப்பாக காணப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகள் சிங்கள தேசியவாதத்திலிருந்து விலகிப் போவதனால் மிதமான இடதுசாரிக் கொள்கையை ஜே.வி.பி பின்பற்றி சமாதான முன்னெடுப்புக்கான முக்கிய தடையாக தன்னை நிலைநிறுத்தியது.
- மாக்சிய இயக்கங்களுடன் தொடர்புகளைப் புறக்கணித்து தமக்கென சிங்கள சோசலிச கொள்கையினை உருவாக்கியமை.
- தேசிய பிரச்சினையில் எந்தவித விட்டுக்கொடுப்பும் இன்றி சிங்கள தேசியவாதத்தினை முன்னெடுத்துள்ள போக்கு காணப்படுகின்றமை.
- அதிகாரப் பரவலாக்கம் என்ற பெயரில் தேசத்தை துண்டாட முன்வைக்கப்படும் எந்தத் திட்டத்தையும் எதிர்ப்பது, அதேநேரம் நாட்டின் இறைமையையும் பூகோள ஐக்கியத்தையும் பேணிக்காப்பது.
- மேற்கத்தேய நாடுகள் அறிமுகப்படுத்த எத்தணிக்கும் பொருளாதார ஊடுருவல்களைத் தடுப்பது.
- எமது தேச அடையாளத்தை சிதைப்பதனைக் குறியாகக் கொண்ட கலாசார ஆக்கிரமிப்புக்களை எதிர்த்தல் இவை போன்ற சிங்கள தேசியவாதத்தை மிகத் தீவிரமாக காண்பிக்க வேண்டிய அவசியமான சந்தர்ப்பங்களில் ஜே.வி.பி என்ற பெயரை நேரடியாகப் பயன்படுத்தாமல் இவைகளின் பின்னால் இருந்து இயக்கிவிட்டு பின்னர் மாறுபட்ட சந்தர்ப்பங்களில் வெளியுலகத்திற்கு தாரள முகம் ஒன்றை காண்பிப்பதாகவும் விமர்சிக்கப்பட்டது.

குறிப்பாக சிறுபான்மை சமூகத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் அவர்களது வாழ்வியல் தொடர்பான எந்தவிதமான கருத்துக்களையோ, கொள்கைகளையோ கொண்டிருக்கவில்லை. அதேவேளை 2020ம் ஆண்டு ஜே.வி.பி இலங்கையின் ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றி இலங்கையை சோசலிச நாடாக மாற்றுவோம் என்ற கோசத்தினை முன்வைத்து வருகின்றது. எனினும் இனப்பிரச்சினைக்கான குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களது பிரச்சினைகள் தொடர்பாக தெளிவான கொள்கை காணப்படாமையானது அவர்களது இலட்சியப் பாதைக்குத் தடையாகவே அமையும். எனவே மக்கள் விடுதலை முன்னணி இன்று சோசலிச சிந்தனையில் இருந்து விடுபட்டுள்ளதோடு இனவாத கொள்கையினை தெற்குப் பக்கத்தில் காட்டிக் கொள்கின்ற அதேநேரம் சிறுபான்மையின பிரச்சினை தொடர்பாக அவ்வப்போது சில கருத்துக்களை முன்வைத்து வருகின்ற போக்கும் காணப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


- உயாங்கொட ஜெ (2003) 'சமூக முரண்பாடு தீவிர எதிர்ப்பு மற்றும் அரச செயற்திட்டம்' கொழும்பு: சமூக விஞ்ஞான மன்றம்
- உயாங்கொட ஜெ (2003) 'உள்ளக முற்றம் இலங்கையின் சமத்துவம், நீதி மற்றும் சாதி ஆகியவற்றின் ஆகியவற்றின் அரசியல் கருத்து வினைப்பாடு' பிரவாதம், கொழும்பு: சமூக விஞ்ஞான மன்றம்
- மூர் எம் (1993) 'இலங்கையில் ஜே.வி.பி, பரிபூரண நவீன புரட்சிவாதிகள்', கொழும்பு, தென்னாசிய கற்கைகள் வெளியீடு.
- விஜயவீர ஆர் (1975) ஜே.வி.பியின் கொள்கைப் பிரகடனம், ஐக்கிய இராச்சியம், பப்ளிகேசன்ஸ்.
- டேவிட் ரம்சன், அசங்க வெலிகல (2005) 'தென்னிலங்கை அரசியல்' கொழும்பு, ஆசிய மன்றம்.
- ரோஹண விஜயவீர (2007) 'எம்மை அழித்தாலும் எமது குரல் ஓயாது' கொழும்பு; நியமுவா வெளியீடு
- அமரசிங்க சோமவன்ச, (2008) ரில்வின் சில்வா 'இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடு' கொழும்பு; நியமுவா வெளியீடு
- யோதிலிங்கம், சி.அ (2008) 'இலங்கை அரசியல் கட்சி முறைமை', கொழும்பு; குமரன் புத்தக இல்லம்
- குணரத்தினம், வே (2009) 'அரசியற் கட்சிகள் அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம்' கொழும்பு; குமரன் புத்தக இல்லம்
- தொழிலாளர் பாதை வெளியீடு (2012) 'இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சியின் வரலாற்று சர்வதேசிய அடித்தளங்கள்' கொழும்பு; தொழிலாளர் பாதை வெளியீடு
- திருநாவுக்கரசு, வ (2014) 'தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வின்றி இலங்கைக்கு விடிவில்லை' கொழும்பு; ஒஸ்ரின் தொழிலாளர் பாடசாலை
- சிவராஜா, அ (2006) 'இலங்கை அரசியல்' கொழும்பு; குமரன் புத்தக இல்லம்
- அர்ஜீனா குணரத்ன (2010) *'வரலாற்று பிரக்ஞையின் உருவாக்கம்: மகாவம்சத்திலிருந்து சிங்கள் தேசியவாதத்தை நோக்கி'* வியூகம், கனடா; வியூகம் வெளியீட்டுப் பிரிவு
- சின்னத்துரை, மு (2015) 'ஈழத்தமிழர் அடையாள அழிப்பும் பின்னணியும்' Colombo: Prominento Book Depot